

ராஜேஸ்வரி

'வெளிநாட்டுத் தயாரிப்பு' என்கிற பெயரில் நம்நாட்டில் மருந்துகள் மிக அதிகமான விலைக்கு விற்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி விழுந்திருக்கிறது. இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள முத்தான, முக்கியமான தீர்ப்பு... லட்சக்கணக்கான ரத்த புற்று (ப்ளட் கேன்சர்) நோயாளிகளின் ஆயுளைக் கூட்டியிருக்கிறது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்ப்பினை பெற்றுத் தந்திருப்பது நடுத்தர மங்கையான வழக்கறிஞர் ராஜேஸ்வரி என்பது நமக்கெல்லாம் பெருமை. இவரின் பூர்விகம் தமிழகம் என்பது... இன்னொரு பெருமை!

டெல்லியில் அவள் விகடனுக்காக அவரைச் சந்தித்தபோது வெற்றிப் பூரிப்பில் இருந்தவர், "நான் பிரபல புனே சட்டக் கல்லூரியில் சட்டம் படித்து முடித்த சென்னைப் பெண். பெரும்பாலும் காப்புரிமை தொடர்பான வழக்குகளை நடத்தி வருகிறேன்" என்று தன்னைப் பற்றிய சின்ன அறிமுகம் தந்தவர், அப்படியே வழக்கு தொடர்பான விஷயத்துக்குள் புகுந்தார்...

"ரத்தப் புற்று என்பது அனைத்து வகை புற்று நோய்களிலும் மிகவும் கொடுமையானது. இது, பெரும்பாலானவர்களுக்கு முற்றிய பின்னரே கண்டறியப்படுகிறது. வெள்ளை அணுக்கள் மளமளவென குறைந்து விடுவதால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சில மாதங்களில் மரண

## உயிர்காக்கும் மருந்து வழக்கு...

# உரிமைப் பெற்றுத் தந்த ஒரு பெண்!

வாயிலை எட்டுவதுடன், மிக அதிக பாதிப்புகளுக்கும் உள்ளாவார்கள். இதை முற்றிலும் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், ஓரளவு உடல் நலத்துடன் மேலும் பல மாத வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் *1992* முதல் 'இமேடினிப் மெஸிலேட்' (Imatinib Mesylate) எனும் பெயருடைய மருந்து சந்தையில் கிடைக்கத் துவங்கியது. சுவிஸ் நாட்டின் 'நோவார்டிஸ்' (Novartis) நிறுவனத்தின் தயாரிப்பான இம்மருந்தின் ஒரு மாதத்துக்கான விலை *1* லட்சத்து *20* ஆயிரம் ரூபாய்.

பெரும்பாலான நாடுகளில் தனது புதிய மருந்துக்

"இந்தத் தீர்ப்பு, தற்போது இந்தியாவின் புற்று நோயாளிகளுக்கு புதிய வாழ்க்கையை கோடுத்துள்ளது."

கான் காப்புரிமையை உடனடியாக பதிவு செய்த 'நோவார்டிஸ்', நம் நாட்டிலும் 'இந்திய கண்டுபிடிப்பாளர் பதிவு ஆணைய'த் திடம் (Indian Patent Office) 1997-ல் விண்ணப்பித்தது. அதேசமயம், இதே தன்மையுள்ள மருந்தை நம் நாட்டின் 'நாட்கோ' எனும் நிறுவனம் 2002 முதல் வெறும் எட்டாயிரம் ரூபாயில் தயாரித்து விற்று வந்தது. வேறு சில நிறுவனங் களும் இம்முயற்சியில் இறங்கின. அதனால், 'நோவார்டிஸ'க்கு காப்புரிமை தர இந்திய நிறுவனங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதில், 'நாட்கோ' நிறுவனம் முக்கியமானது.

ஜனவரி 25, 2006-ல் 'நோவார்டிஸ்'-ன் காப்புரிமை விண்ணப்பம் பரிசீலனைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது. அடுத்த கட்டமாக உயர் அமைப்பான 'அறிவுசார் சொத்துரிமை முறையீட்டு வாரியம்' (Intellectual Property Appellate Board) முன் விவகாரம் சென்றது. அந்த அமைப்பும் தள்ளுபடி செய்துவிட, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது 'நோவார்டிஸ்'. வழக்கின் முக்கிய பிரதிவாதிகளான 'நாட்கோ' சார்பில் நான் வாதாடினேன். வழக்கு வென்றுள் ளது. வெளிநாடு மற்றும் உள்நாட்டு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த இந்தத் தீர்ப்பு, தற்போது இந்தியாவின் புற்று நோயாளிகளுக்கு புதிய



வாழ்க்கையை கொடுத்துள்ளது" என்றபோது பெருமிதம் அவர் குரலில்.

"ஒருவேளை இந்த வழக்கு ஆண் வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் கண்டிப்பாக ஜெயித்திருப்பார் என்கிற கருத்து எழுவதற்கு நாம் இடம் தந்து விடக்கூடாது என்கிற பயம் எனக்கு இருந்தது. அதனால், இவ்வழக்கு தொடர்பாக வழக்கத்துக்கும் மேலாக சிரத்தை எடுத்தேன். இந்தியாவில் சில சர்வேக்களையும் செய்து பலவகையான புள்ளி விவரங்களையும் திரட்டினேன். மும்பையிலுள்ள புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்கள் சங்கத்தைச் சேர்ந்த வர்கள் கொடுத்த பல முக்கிய தகவல்களும் வழக்குக்கு பெரும் உதவியாக இருந்தன" என்று பெருமையோடு சொல்கிறார் ராஜேஸ்வரி.

இவருடைய கணவர் ஹரிஹரனும் ஒரு வழக்கறிஞர். 'ராஜேஸ்வரி - அசோஸியேட்ஸ்' எனும் சட்ட நிறுவனத்தின் பங்குதாரரான ராஜேஸ்வரி, மருந்து காப்புரிமை குறித்த வழக்குகளில் வாதாடி வெற்றி பெறுவது முதன் முறை அல்ல. ஜெர்மன் நாட்டை சேர்ந்த ஒரு நிறுவனம் கல்லீரல் புற்றுநோய்க்கான மருந்து தயாரித்து வந்தது. ஒரு மாதத்துக்கான விலை 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய். அனைவராலும் இதற்கான மருந்தை விலை கொடுத்து வாங்க முடியாத நிலை. குறிப்பாக, சாராயம் போன்ற போதை மருந்து அருந்துவதால், ஏழைகள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்பட்டனர். இந்தியாவில் ஓராண்டுக்கு சுமார் 30 ஆயிரம் பேர் உயிர் இழக்கும் கொடுமை. இதை வெறும் 8,700 ரூபாயில் தயாரித்தது 'நாட்கோ'. இதற்காக, அந்த மருந்துக்கு ஜெர்மன் நிறுவனம் பெற்றிருந்த காப்புரிமையை எதிர்த்து வழக்காடிய ராஜேஸ்வரிக்கு, கடந்த மாதம் வெற்றி கிடைத்தது!

"இதுபோன்ற வழக்குகளால் வெளிநாட்டு நிறுவனங்களின் மிக விலை உயர்ந்த தயாரிப்புகளுக்கு ஈடான மலிவு விலை மருந்துகளை இந்திய நிறுவனங்கள் உற்பத்தி செய்ய இதுவரை தயங்கி வந்தன. காரணம், கோடிக்கணக்கில் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்க வேண்டி வந்து விடுமோ என்கிற பயம்தான். இப்போது 'நோவார்டிஸ்' வழக்கின் வெற்றி, ரத்த புற்று போல் வேறு சில கொடுமையான நோய்களுக்கான மருந்துகளின் இந்திய தயாரிப்புகளை உற்சாகப்படுத்தி உள்ளது.

மார்பு புற்று, சிறுநீரக புற்று, நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்களுக்கான மருந்துகள் மீது நடந்து வரும் வழக்குகளில் பல்வேறு இந்திய நிறுவனங்களுக்காக நான் வாதாடி வருகிறேன். இதன் முழு பலனையும் அதனால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடம் கொண்டுபோய் சேர்க்க நிச்சயம் வெற்றி பெறுவேன். எனது உழைப்பு- நம் இந்திய சமூகத்துக்கு உதவியாக இருப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்!"

- கம்பீரப் புன்னகையுடன் கை குலுக்கி விடை கொடுத்தார் ராஜேஸ்வரி!

**- ஆர்.ஷஃபி முன்னா,** படங்கள்: **எஸ்.சபா**